# DEBUT EVENT OF KOOTHTHU (TAMIL REGIONAL ART FORM) IN THE CULTURAL SPACE: ARICHANTHIRAN DRAMA VADAMODI KOOTHU - A STUDY

**Mr. S.Chandrakumar**

Senior Lecturer, Department of Fine Arts, Eastern University, Sri Lanka, Vantharumoolai

**Abstract**

This is expanded in the contemporary globalization environment by creating a dominant power within the local people through the Colonial Conceptual thinking. In the cultural Space, the festivals and the elements of community life has been motivated in the present neocolonialism with the help of technology; it has indirectly led towards the thinking that the Western world is only with high standards, inventions and has made a negative influence of saying that the Eastern part of the world is with no civilization. When presenting the Kooththu performances in the cultural context, the great creative works, which is mingled with the community life enhance the achievement of it. The people establish the Theatre in their own and also involve themselves in it; hence, they implement it in way to bring a variety of developments to them. Kooththu is usually formed in an open space as a community centered activity with "Kalariyadiththal" (dancing, singing as well as acting) along with the intervention and the management of the people. The importance of Kooththu Debut event is not only dancing and listening to the songs, but it is the place where the people are getting together and expose their feelings as well as the expression of ability. In this event, people will join together and act inwardly and outwardly. It will be full of mental, emotional and cultural values. In the year 2017, when "Arichanthiran Drama", Vadamodi Kooththu was debuted in the area named Kokkaddicholai, the Kooththu Community was collectively empowered. This study is based on the aspects of Kooththu such as using the mental and physical parts of the body, the nature of debut, the impact of presenting the performance, gathering, identification, collective self-exposure, professional exposure as well as the sharing of thoughts.

**KeyWords:** Kooththu Debut event, Cultural Space, community life, Arichanthiran Drama, Colonial concept.

**ஆய்வுச் சுருக்கம் (Abstract)**

காலனியக் கருத்தாக்க சிந்தனை கல்வியினூடாக உள்ளூர் மக்களிடம் தமக்கான அதிகார ஆதிக்கத்தை ஏற்படுத்தி, சமகால உலகமயமாக்கல் சூழலில் விரிவாகியுள்ளது. பண்பாட்டு வெளியில் விழாக்களும் சமூக வாழ்வியல் கூறுகளும் நவகாலனியச் சூழலில் தொழில் நுட்ப ஊடகங்களின் துணையுடன் ஊட்டப்பட்டு மறைமுகமாக சிந்தனையில் மாற்றங்களை ஏற்படுத்தி மேற்குலகமே மேலோனது, கண்டுபிடிப்புக்குரியது, கீழைத்தேயம் மற்றவையாகப் பார்க்கப்பட்டு நாகரிகமற்றது எனும் கைங்கரியத்தை ஏற்படுத்தி பெரும் திண்டாட்டத்திற்கு உட்படுத்தியுள்ளது. பண்பாடடு வெளியில் நடக்கும் கூத்தாற்றுகைகளில் சமுதாய வாழ்வியலுடன் இணைந்த படைப்புக்கள் மேலேழுந்து அதனைச் சாதிக்க வைக்கின்றன. மக்களே தமக்கான அரங்கை ஆக்கி அதனில் தம்மை ஈடுபடுத்தி பல்வகை முன்னேற்றங்களை அடைவதற்கு சுயமாகச் செயற்படுத்துகின்றனர்.

கூத்து சமூகத்தை மையப்படுத்தி அதன் செயற்பாட்டினூடாகக் களரியடித்து மக்களின் ஊடாட்டம், முகாமைத்துவம் ஆகியவற்றுடன் திறந்த வெளியில் உருவாவது. இதன் அரங்கேற்ற விழாவில் ஆடல், பாடலை மட்டும் ரசிப்பது மட்டுமல்ல, மக்கள் கூட்டாக இணைந்து தமக்கான உணர்வையும், திறன் வெளிப்பாட்டையும் வெளிப்படுத்துவது. இவ்விழாவில் மக்கள் ஒன்று கூடி இணைந்து அகம் புறமாகச் செயற்படுவர். இதில் உள, உணர்வு, பண்பாட்டுப் பெறுமானங்கள் நிறைந்திருக்கும். ‘‘அரிச்சந்திர் நாடகம்’’ வடமோடிக் கூத்து 2017ம் ஆண்டு கொக்கட்டிச்சோலையில் அரங்கேற்றப்பட்டபோது கூத்தர் சமூகம் கூட்டாக வலுப்பெற்றது. இதில் உள, உடலைப் பயன்படுத்தல், அரங்கேற்றத்தின் தன்மை, இதன் நடைமுறையின் தாக்கம், ஒன்றுகூடல், அடையாளப்படுத்துகை, கூட்டுத்தன்னிலை வெளிப்பாடு, நிபுணத்துவ வெளிப்பாடு, சிந்தனைப் பகிர்வு ஆகியவற்றை மையப்படுத்தியதாக இவ்வாய்வு அமைகின்றது.

**திறவுச் சொற்கள் (Key Words): கூத்தரங்கேற்ற விழா, பண்பாட்டு வெளி, சமுதாய வாழ்வியல், அரிச்சந்திர நாடகம், காலனியக் கருத்தாக்கம்.**

## அறிமுகம் (Introduction)

உலகமயமாக்கல் சூழல், நுகர்வுப் பண்பாட்டை திட்டமிட்டு அனைத்து மக்கள் மத்தியிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இலாபத்தை மட்டும் இலக்காகக் கொண்ட இந்த அணுகுமுறை பல்தேசியக்

கம்பனிகளாலும் நவீன அறிவின் புலமையாளர்களாலும் வலுவாக்கப்படுகின்றது. தனிமனிதர்களாக்கப்பட்டு கூட்டுச் செயற்பாடும் சுயவாழ்தலும் தீர்மானம் எடுத்தலும் இன்றி மனிதர்கள் பெரும் திண்டாட்டத்தினுள் அமிழ்த்தப்பட்டுள்ளனர். நவீன தொழில்நுட்பத்தின் முன்னேற்றம், ஆக்கிரமிப்பு அதன் வர்த்தக நடவடிக்கைகள் இதனை முன்னெடுக்கின்றது. பொருளைத் தேடியலையும் நெருக்கடிகளாலும் சவால்களாலும் நிம்மதி இழந்து மனச்சோர்வுடன் அழுத்தங்களுக்கு உள்ளாகும் மானிட சமூகத்தின் உள ஆற்றுப்படுத்தலுக்குப் பண்பாட்டுப் பாரம்பரிய நடைமுறைகளும் கலைச் செயற்பாடுகளும் பெரும் துணைபுரிகின்றன. இவை பிரதான ஊடகமாகவும் தொட்டுணர முடியாத மரபுரிமைகளாகவும் (Intangible Cultural Heritage) நடைமுறையில் இருந்து சமூகத்தை வலுப்படுத்துகின்றன. மட்டக்களப்பில் இதற்கான பருவகாலம் தனித்துவமான பல கலைச் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றது. பாரம்பரியக் கூத்தரங்கின் உருவாக்கமும் அதனில் சமுதாயம் பங்குகொண்டு படைப்பாற்றலையும் கண்டுபிடிக்கும் திறனையும் கொண்டுள்ளமை மிகச் சர்வ சாதாரணமாக நடைமுறையில் உள்ளது.

கூத்தரங்கேற்ற விழா ஒரு சமூகத்தின் பண்பாட்டு வெளியில் கூட்டு அழகியல் உணர்வு, சமூக ஊடாட்டம், நிபுணத்துவ வெளிப்பாடு, அடையாளப்படுத்துகை ஆகிய சமூகம்சார் கூட்டுத் தன்னிலை வெளிப்பாடுகளைக் கொண்டுள்ளன. இதனை அடிப்படையாகக் கொண்டதே இவ்வாய்வு.

**இலக்கிய மீளாய்வு (Literature review)**

பண்பாட்டு வெளியில் கூத்து அரங்கேற்ற விழா எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பது தொடர்பான அணுகுமுறையுடன் ஆய்வுகள் வெளிவந்தது குறைவு. ஆய்வாளர்கள் தமக்கான தேவைக்கு ஏற்ப இதனைப் பயன்படுத்துகின்றனர். சி.மௌனகுருவின் ''மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்'' எனும் ஆய்வு நூலில் தமது ஆய்வின் தேவை கருதி மட்டக்களப்புக் கூத்துக்களின் ஆடல், பாடல் அமைப்புக்கள் பற்றியே கூறியுள்ளார்.

காரை செ.சுந்தரம்பிள்ளையின் ''வட இலங்கை நாட்டார் அரங்கு'' கூத்தின் ஆடல், பாடல், கதைக் கட்டமைப்பு பற்றியே ஆராயப்பட்டுள்ளது. கூத்தும் அதனுடன் தொடர்புடைய பிறதகவல்களும் எனும் தலைப்பில் அரங்பேற்ற விழா ''களரியேற்றம்'' எனக் குறிப்பிடப்பட்டு, அது மிகச் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது.

திரு.சு.சந்திரகுமார் 2014 ஆண்டு கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறையில் முதுதத்துவமாணிக்காக ''ஈழத்துக் கூத்தியல் ஆய்வில் காரை செ.சுந்தரம்பிள்ளையின் வட இலங்கை நாட்டார் அரங்கும் பேராசிரியர் சி.மௌனகுருவின் மட்டக்களப்பு மரபுவழி நாடகங்களும் - ஓர் ஒப்பீட்டாய்வு'' எனும் தலைப்பில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வில் கூத்தின் அழகியல் பற்றி ஆராய்வதற்கும், கூத்தரங்கில் காணப்படும் சமுதாய அரங்கத் தன்மை எனும் தலைப்பில் கூத்தின் தொடர்செயற்பாடு பற்றி ஆராய்வதற்கும் அரங்கேற்ற விழா பற்றிக் கூறப்பட்டாலும், குறித்த ''அரிச்சந்திரன் நாடகம்'' வடமோடிக் கூத்தின் அரங்கேற்ற விழா பற்றி இல்லை.

இதனை அவதானிக்கும்போது அரங்கேற்ற விழா பண்பாட்டு வெளியில் அதன் பண்பாட்டுடன் தாக்கம் செலுத்துவதைப் பற்றி ஆராயப்படவில்லை என்பது புலனாகின்றது.

**பொருளும் ஆய்வுமுறையியல் (Material and Methodology)**

இவ்வாய்வில் விபரண முறையியல், பங்குகொள் முறையியல் (Participatory research Method), கள நிலை அணுகு முறை (Field orientated approach), விமர்சனமுறையியல் என்பன பயன்படுத்தப்பட்டு பண்புசார் (Quality) முறையிலேயே அணுகப்படுகின்றது.

முதநிலைத் தரவு:- கலந்துரையாடல், உற்றுநோக்கல், பங்குகொள்ளல் ஆகியவையும், இரண்டாம் நிலைத்தரவு இது தொடர்பான எழுத்துக்கள், இணையம் ஆகியவையும் ஆகும்.

இவ்வாய்வின் நோக்கம்:- அரங்கேற்ற விழா பண்பாட்டு வெளியில் ஏற்படுத்தும் தாக்கம் பற்றி வெளிக் கொணர்தலாகும்.

**பெறுபேறும் கலைந்துரையாடலும் (Results and Discussion)**

சமூகங்கள், இனங்கள், நாடுகள் என்ற நிலைகளில் காணப்படும் பல்வேறுபட்ட உறவுகள், கலை அழகியல் வெளிப்பாடுகள், சடங்குகள், வழிபாடுகள் என்று இத்திறத்தனவற்றைக் குறிப்பது பண்பாடு. (நடராஜன்.தி.சு.2008:01) கூத்து ஆடலையும் பாடலையும் கொண்ட அரங்கியல் களமாக உள்ளது. எனினும் இதன் உயிர்த்துவமும் வாழ்வியலும் செயற்படுவதனூடாக சமுதாய ஊடாட்டத்தை ஏற்படுத்தி உருவாக்குதலும் நுகர்வுப் பண்பாட்டை நீக்கி சுய சிந்தனையை வலுப்படுத்துவதுமானது வித்தியாசங்களுடன் ஊருக்கு ஊர் கூத்தர்களால் முன்னெடுக்கப்படும் கூத்தாற்றுகைகள் கூத்தர்களின் சமூக பொருளாதார நடைமுறைக்கேற்ப வருடத்திற்கு ஒருமுறை அல்லது வருடத்திற்கு இருமுறை அல்லது சில வருடங்களுக்கு ஒருமுறை என வசதிக்கேற்ப பண்பாட்டு அசைவியக்கத்துடன் பயிலப்படுகின்றது.

கூத்து உருவாக்கத்திற்கான ‘‘களரியடித்தல்’’ காலம் குறைந்தது மூன்று மாதங்கள் முதல் கூடியது ஒருவருடம் வரை எடுக்கும். களரியடித்தல் வெளி சமுதாய வாழ்வியலையும், ஆற்றுப்படுத்தலையும் படிப்படியாக வலுப்படுத்தும் திறந்த வெளி ஆற்றுகைக் களமாகும். இதன் மூலம் கூத்து ஆட்டத்தின் ஆற்றுகை அழகியல் முறையாக உருவாகிய பின்னர் கூத்தின் முகாமைத்துவக் குழுவால் விழா எடுப்பதற்குத் தீர்மாணிக்கப்பட்டு அடுக்குப்பார்த்து மதிப்பீடு செய்து கிராமத்தின் பொது வெளியில் வட்டக் களரி கட்டி அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டு அரங்கேற்ற விழா நடைபெறும். இந்த அரங்கேற்ற வெளியில் ஆட்டம், பாட்டு, கதைக் கட்டமைப்பின் முழுமை, காண்பியம் முதலான அழகியல் அம்சங்களை ரசித்து சுவைப்பது மட்டுமல்ல, மக்களின் உளங்களில் நிறைந்துள்ளதைப் பகிர்வதற்காகவும் ஊடாடுவதற்காகவும் அமையும்.

கொக்கட்டிச்சோலைக் கூத்தர்களால் ஆற்றுகை செய்யப்பட்ட ‘‘அரிச்சந்திரன் நாடகம்’’ வடமோடிக் கூத்து 06.05.2017 அன்று சமூக விழாவாக (Social Event) கூத்துக்கான பண்பாட்டு நிலை நின்று நடைபெற்றது. கூத்து கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் திருவிழாக் காலங்களில் வருடா வருடம் நான்கு தொடக்கம் ஆறு கூத்துக்கள் களரியேற்றப்படுவது வழக்கம். ஆனால், ஊரவர்களால் 1956களின் பின்னர் 2017இலேயே கூத்தின் தொடர் செயற்பாட்டினூடாக இக்கூத்து இளைஞர்களால் ஆடப்பட்டுள்ளது. 1956களில் ‘‘அரிச்சந்திரன் நாடகம்’’ வடமோடிக் கூத்தே இவ்வாறு ஆடப்பட்டுள்ளது. ஊர் இளைஞர்களும் பெரியவர்களும் ‘‘தான்தோன்றீஸ்வரா கலைக்கழகத்தினூடாக’’ இக்கூத்தை உருவாக்கியுள்ளனர். அரச உத்தியோகம் பார்க்கும் அதிகமான இளவயதினர் கூத்தில் ஆடியதுடன் மிகவும் திறமையாகவும் ஆற்றலுடனும் கூத்தாற்றுகையை வெளிப்படுத்தினர்.

இதற்கான அண்ணாவியாராக ப.கதிர்காமநாதன் செயற்பட்டார். கூத்தின் முன்னீடு முகாமைத்துவம் க.இராசலிங்கம், பி.நீதிதேவன் ஆகியோர் முன்னெடுத்தனர். இக்கூத்திற்கான ‘‘களரியடித்தல்’’ (பழகுதல்) நடைபெறுகின்ற போது இவ்வாய்வாளரால் ஆடல், பாடல், கதைக் கட்டமைப்பின் நகர்வு, கூத்தர்களின் திறன் வெளிப்பாடு, சமூக ஊடாட்டம் ஆகியன பற்றி உற்றுநோக்க முடிந்தது. அண்ணாவியார் இதன் போது ‘‘கூத்தாடிய கூத்தர்களில் பெரும்பான்மையினர் கூத்தாடிய அனுபவம் இல்லாதவர்கள். ஆனால், ஆடத் தொடங்கிய பின் இவர்கள் ஆட்டம், பாட்டு, கதை, நாடக ஓட்டத்தில் தேர்ச்சி பெற்றுள்ளதோடு, தாளம் போடவும், கொப்பி பார்த்து பிறருக்குச் சொல்லிக் கொடுக்கவும் பயிற்சி பெற்றுள்ளனர்’’ (நேர்காணல்: ப.கதிர்காமநாதன்) எனக் குறிப்பிட்டார். இதனை இவ்வாய்வாளராலும் அவதானிக்க முடிந்தது. ‘‘நான் இதற்கு முன்னர் கூத்தாடவில்லை. இதுதான் இப்படிக் கூத்தாடுவது முதற்தடவை’’ (நேர்காணல்: ப.சுரேஸ்குமார்) என ஒரு கூத்தர் குறிப்பிட்டார். புதிதாகக் கூத்தாடும் இளைஞர்கள் வெவ்வேறு அரச தொழில் செய்பவர்கள். கூத்துக் கலையை தன் உயிராக மதித்து சமூகத்தின் அடையாளமாகவும் பண்பாட்டின் தனித்துவமாகவும் தம் வாழ்வியலுடன் இணைத்து தாமாகவே உணர்ந்து வலுவான உறுதி கொண்டு களரியடித்தமை குறிப்பிடத்தக்கது. இக்களரியடித்தலான பயிற்சிக் காலத்தில் இளைஞர்கள் கூத்தில் ஈடுபட்டு தமது திறன், ஆற்றல் ஆகியவற்றின் மேனிலை வெளிப்படுத்தப்பட்டது.

இவர்கள் தமக்கான கூத்தனுபவத்தை வளர்ப்பதற்கு வேறு ஊர்களில் நடைபெற்ற ‘‘களரியடித்தல்’’, ‘‘அரங்கேற்ற விழாக்களுக்குச்’’ சென்று பார்த்து தமக்குள் உள்வாங்கினர். கூத்தாடுவோர் நிறையக் கூத்துப் பார்க்கும்போதே ஆட்டம், தாளம், சமுதாய அழகியல் உருவாக்கம், சமுதாயம் கூத்தில் எதிர்பார்ப்பது, கூத்துப் பண்பாட்டு நடைமுறை, சமூக ஊடாட்டம், பிரதேச ஆற்றுகை வித்தியாசங்கள் ஆகியவற்றைக் கற்றுக் கொண்டு தாம் தாமாகவே திருந்தி ஓர் ஆற்றுகையாளராக வலுப்பெறுவர்.

பண்பாட்டு வெளி (Cultural space) குறித்த சமூகத்தின் கூத்துத் தயாரிப்புச் சூழலில் கூத்தர் தமது உடலால் செய்து ஆற்றுகையில் ஆடல் வல்லுனராக உருவாகும் தன்மையக் கொண்டு வரும் இயல்பை ஏற்படுத்தும். பண்பாட்டு வெளியும் ஆற்றுகை வெளியும் இதன் இணைவை பரிவர்தனை செய்யும். ‘‘அடிப்புறத்தில் இருந்து அடிப்புறத்திற்கு’’ எனும் கருத்தியல் இதன் முன்னெடுப்புக்கு வழிகோலுகின்றது.

**கூத்து அரங்கேற்ற விழாவும் சமுதாயக் கூட்டு உள வெளிப்பாடும்**

கூத்தரங்கேற்ற விழாவிற்கான முன்னாயத்தமாக ‘‘களரிகட்டுதல்’’ முக்கியமான கூட்டுச் செயற்பாடாக நடைபெற்றது. கூடி முன்னெடுத்து செய்து செயற்பட்டு திறனை வெளிப்படுத்துவதும், அதனை இளம் தலைமுறையினர் கற்றுக் கொள்வதும் கூத்தரங்கின் ஆற்றுகை வெளியில் இயல்பாக இடம்பெறுவது வழமை. இதனை இக்களரிகட்டும் வெளியில் காணமுடிந்தது. களரி கட்டுவதற்கான அளவுப் பெறுமானங்களையும், அதற்குத் தேவையான பொருட்களையும், அதனை அலங்கரிக்கும் முறையையும், அதன் நுட்பமுறைகளையும் இவ்வாய்வாளரிடம் கேட்டிருந்தார். இவ்வாய்வாளரும் ஊருக்குள் கூத்தர்களிடமே இதனை அறிந்திருந்தே கற்றுக் கொண்டிருந்தார். இதனை இவ்விடத்திலும் பகிர்ந்து கொண்டதோடு ‘‘களரியின் மேற் கூடாரம் அமைப்பதற்கான வலையையும்’’ கொண்டு கொடுத்து களரி கட்டுவதற்கு உதவியைச் செய்ய முடிந்தது. இதனைக் கட்டும் நுட்பமுறை பற்றி மேலதிகமாகத் தேடி அறிந்தவை பகிரப்படும் சூழலை விரிவாக்கியது. பின்னர் இவ்வூரில் களரி கட்டிய தேர்ச்சியடைந்த மூத்த கூத்தர்கள் அவ்விடத்தில் வந்து சேர்ந்து அதன் நுணுக்கங்கள் பற்றி உரையாடிப்

பகிர்ந்ததால் மேலும் அழகுபடுத்தப்பட்டது. இவ்வாய்வாளராலும் அவர்களிடம் இருந்து வித்தியாசங்களைக் கற்றுக் கொள்ள முடிந்தது. கூத்து ஆடும் இளைஞர்கள், விளையாட்டுக் கழகத்தினர், பெரியவர்கள், சிறுவர்கள் எனப்பலரும் உற்சாகமாக ஈடுபட்டனர். குருத்து ஓலை, வாழை, கம்பு, தடிகள், கம்பி, மண், கயிறு, ஊசி எனத் தேவையான பொருட்கள் அங்கு முகாமைத்துவத்தின் உதவியுடன் கொண்டு வரப்பட்டு சேர்ந்து செயற்பட்டு அழகிய களரி உருவானது.

கூத்து அரங்கேற்ற விழாவின் தொடக்க நிகழ்வில் அதிதிகள் வரவேற்பும், கூத்தர்களுக்கான கௌரவிப்பும் நடைபெற்றது. உள்ளூர் உணவும் பசும் பாலும் அருந்துவதற்குப் பரிமாறப்பட்டது. இன்றைய உலகமயமாக்கல் உற்பத்தி வெளியின் பூதாகரமான சக்திக்கு இந்த பண்பாடுசார் உணவுப் பழக்கவழக்கம் பதிலடியாக அமைந்திருந்தது. இது கேக்துண்டும், பல்தேசியக் கம்பனிகளின் உற்பத்தியால் உருவாகும் மென்பானங்களும் பரிமாறப்படும் கற்றோருக்கான உயர்கல்வி நிறுவனங்களின் நிகழ்ச்சிகளுக்கும் திருமண நிகழ்வுகளுக்கும் திருப்புமுனையாக அமைந்தது.

கூத்துக் களரியைச் சுற்றி ஊர்மக்கள் பார்ப்போராகவும் பங்குகொள்வோராகவும் பெருக்கெடுத்தனர். படுவான்கரையின் அதிகமான ஊர்களில் இருந்தும், எழுவான் கரையில் இருந்தும் ஒன்றுகூடினர். சிறுவர்கள், சிறுமியர், இளைஞர், யுவதிகள், முதியோர்கள், பெண்கள், உத்தியோகத்தர்கள், கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறை மாணவர்கள், விரிவுரையாளர்கள் எனப் பலரும் குடும்பமாகவும், கூட்டமாகவும் வந்திருந்தனர். கூத்தில் சுவையை உருவாக்கி ரசிப்பதும் அதில் தாமாக ஈடுபடுவதும் முக்கியம். மக்கள் கூத்தாற்றுகையின் ரசிகர்கள் ஆவர். பார்ப்போராக அங்கு தோன்றிய வேறு ஊர் கூத்தர்கள் தமக்கான கற்றல், மாற்றும் கருத்துப் பகிரும் இடமாகவும், அண்ணாவிமார் மத்தள அடியின் வாலாயத்தை வெளிப்படுத்தும் சந்தர்ப்பமாகவும் பயன்படுத்தினர். இவ்விழாவிற்கு முன்னர் வாளக்காலையில் நடைபெற்ற “ஆஞ்சநேயர் யுத்தம்” வடமோடிக் கூத்து அரங்கேற்ற விழாவிலும் இந்தப் பண்பாட்டு ஊடாட்டத்தைக் காணமுடிந்தது. இவ் விழாவின் வெளியில், 08.05.2017ஆம் திகதி மகிழடித்தீவில் “அல்லி நாடகம்” தென்மோடிக் கூத்து வே.வல்லிபுரம் அண்ணாவியாரால் பழக்கி அரங்கேற்றப்பட உள்ளதாகவும், 09.05.2017ஆம் திகதி கொல்லனுல்லையில் ப.கதிர்காமநாதன் அண்ணாவியாரால் பழக்கிய “17ம், 18ம் போர்” வடமோடிக் கூத்து அரங்கேற்ற விழா நடைபெறவுள்ளதாகவும் உரையாடப்பட்டு, அங்கிருந்தவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இதன் மூலமும் கூத்தர்களின் கூட்டு உளப்பாங்கு உணரப்பட்டது. “அரங்கேற்ற விழாக்கள்” கோலாகலமாகக் கொண்டாடி மகிழ்வதாற்கான திறந்த வெளிக் கூட்டுணர்வுக் களத்தைக் கொடுப்பதற்கு அந்தந்தப் பண்பாட்டு நடைமுறைகள் துணைபுரிக்கின்றன.

கோயிற் திருவிழா போல் காட்சியளித்த இவ்வரங்கேற்றவிழா கூத்தர்களின் அறிவு, திறன், ஆற்றலைக் கொண்டாடி மகிழும் வெளியாக அமைந்தது. கூத்துக் கலைஞர்களின் ஆட்டமும் பாட்டும் வடமோடிக் கூத்திற்கு ஏற்ப அருமையாகவும் அழகாகவும் அமைந்திருந்தது. பாடலைப்பாடும் முறை, குரல்வளம், ஆட்ட லயம், ஆட்டக் கோலங்களின் வடிவமைப்பு களைப்பின்றி ஆடும் தன்மை கூத்தாற்றுகை அழகியலை வலுப்படுத்தியது. கட்டியக்காரனுக்காடிய சிறுவனின் குரலும் அதன் கணீர் எனும் கம்பீரமும், ஞாபகசக்தியும், கலைத்துவமும் அரங்கினுள் கூத்துப்பாட்டு, ஆட்டத்துடன் பயமின்றி விளையாடிய தன்மையும் மானிட வாழ்வின் அழியாச் சொத்தாக கூத்துக்கலை வாழும் என்பதை உணர்த்தியது. துணிவும், உற்சாகமும், பாடலை வடமோடிக் கூத்து ராகத்துடனும், இன்னிசையுடனும், தாளத்துடனும் பாடி ஆடியமை அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. அனைத்துக் கூத்தரும் இந்த நிலையை அடைந்தனர். இக்கட்டியக்காரனுக்காடியவரே பாணப் பெண்ணுக்கும், லோகிதனுக்கும் ஆடினார். பெண்கூத்து, ஆண்கூத்து, கட்டியம் கூறுபவன் எனும் கூத்துத் தன்மை (பாத்திரமேற்பின்) வெளிப்பாடானது அழகான காத்திரமான ஆற்றுகையைக் (Expressively feisty) கொடுத்தது. ஆற்றுகையாளர்கள் வெவ்வேறு கூத்துக்களைத் (Characters) தாங்கி ஆடி இவ்வாறான திறமையுடன் வெளிப்படுவது வழமை. இதனாலேயே கூத்தில் ஆடித் திறனை வெளிப்படுத்தினால் அவர் ஆடிய கூத்துக்கான பட்டப் பெயருடன் மக்களால் அழைக்கப்படுவது வழமை. ஆட்டம், பாட்டு, அதற்கான பாத்திரக் கட்டமைப்பும், அப்பாத்திர உருவாக்கமும், கூத்து வெளிப்பாடும், தொய்வில்லாத நிகழ்த்துகையும், தொடர்பயிற்சி, தேடல், முயற்சி, கண்டுபிடிப்பு ஆகியவையும் பட்டப் பெயரை வழங்கவைக்கும். “அல்லி கந்தையா”, “குருக்கேத்திரன் கணபதி”, “நொண்டிப் பொன்னர்”, பறைச்சி வாலர் என அழைப்பதற்கான காரணம் அதுவே. ஊர்மக்களே இதற்கான அங்கீகாரத்தைக் கொடுப்பர். இவ்வாறே அரிச்சந்திரன், சந்திரமதி, பறையன், முனிவர், வசிட்டர், மந்திரி எனப் பலரும் தமது ஆட்ட வல்லமைகளை வெளிப்படுத்தினர். கதைக் கட்டமைப்பு சிறப்பாக வெளிப்பட்டமையே மக்களின் மகிழ்வுக்குக் காரணம் என்பதை உணர்த்தியது.

ஒவ்வொருவரின் வரவிலும் அழைக்கப்பட்டவர்கள் வந்து அவர்களுக்கான கௌரவத்தைக் கொடுத்து வாழ்ந்தியமை, கூத்தாற்றுகையில் ஒரு பகுதி சமூக ஊடாட்டத்தின் வாழ்த்துதலில் முக்கியமானது என உணர்த்தப்பட்டது. கௌரவிப்பும், வாழ்த்துதலும் கூத்தினை ஆட உற்சாகப்படுத்துவதாகும். சிறுவர்கள், முதியோர்கள், பெண்கள் எனப் பலர் வந்து காசுமாலை, பூமாலை சால்வை என்பன அணிவித்ததோடு பண உறையும் கொடுத்து மகிழ்ந்தனர், மகிழ்வித்தனர். வரவிற்கான வெளிப்படுத்துகையைப் பட்டாசு வெடியுடன் வெளிப்படுத்தினர். மக்கள் கூடிக் கொண்டாடி நிம்மதியாக இருந்து பார்த்து மகிழ்ந்தனர். பெற்றோர்கள், மனைவி, சகோதர்கள் எனப் பலரும் தத்தம் கூத்தர்களுக்கு உடுப்புக்கட்டி உதவினர். கன்னங்குடா மேஸ்திரியாரான

ந.சந்திரசேகரமே இக் கூத்தின் பிரதான ஒப்பனையாளர். இவ்வாறு அனைவரும் சங்கமிக்கும் பண்பாட்டு வெளியாக விழா அமைந்தது.

சமூகம் தமக்கான கூத்து வரலாற்றையும், அதன் மூலம் முன்னோரின் அரங்கியல் புலமைத்துவத்தையும் நினைவுகளில் இருந்து உரையாடுவதற்கான திறந்தவெளிக் களத்தை இவ்விழா கொடுத்தது. கலைகளினூடாக வெளிப்படும் வரலாறு இளம் தலைமுறையினருக்குப் பரிமாற்றப்படுவதும், புதுப்பிக்கப்படுவதும் கூத்தரங்கச் செயற்பாட்டினால் மேலோங்கிப் பரவலாகும் தொட்டுணராப் பாண்பாட்டுப் பாரம்பரியமாகும்.

1956ஆம் ஆண்டு ''அரிச்சந்திரன் நாடகம்'' வடமோடிக் கூத்து நாடகம் ஆடப்பட்டது. இதில் ஆடியோர் இரண்டு பேர் வாழ்கின்றனர். இது ஊருக்குப் பெயர் எடுத்துக் கொடுத்தமையும் இதனைப் பழக்கியது இளையதம்பி அண்ணாவியார் என்பதும் இது சிவன் கோயிலில் தற்போது தேர் கிடக்கும் இடத்தில் களரிகட்டி அரங்கேற்றப்பட்டது என்பதும் பல கோணங்களில் தமக்குள் கதைத்துக் கொண்டனர். (நேர்காணல்:க.இராசலிங்கம், சி.நேசதுரை) இன்றைய ''அரிச்சந்திரன் நாடகத்துடன்'' முன்னைய நினைவுகளை இணைத்துப் பார்த்தனர். (நேர்காணல்:வே.வல்லிபுரம்) மக்கள் திரள் பெருக்கெடுத்ததால் தமக்கான உணர்வுமயத்தில் நின்று உள்ளத்தில் தேன்றிய வரலாற்றைச் சொந்த மொழியில் உரையாடினர். ''மக்களின் வரலாற்று அனுபவங்களது கூட்டு நினைவு வங்கியாக இருக்கும் பண்பாடாக மொழி திகழ்கிறது'' (கூகி வாத்தியாங்கோ: 2017,19) பார்ப்போரால் சமனான பங்குபற்றுதல் இருந்தமையினாலேயே ஆற்றுகை வெற்றியளிக்கும் நிகழ்வாக அமைந்தது. (Erika Fischer – Lichte: 2008, P22)

ஆரையம்பதியில் தனது வீட்டில் இருக்கும் கிரீடம் தனது அப்பா மேஸ்த்திரியார் சின்னத்தம்பி செய்ததாகவும், தனது அண்ணனும் தானும் பூக்கள் செய்து கொடுத்ததாகவும், கரப்புடுப்பு பிரம்பு வளையத்தால் தட்டுத் தட்டதாகக் கட்டி அதில் தட்டுத் தட்டாகத் தைத்த துணியை வைத்துக் கட்டித் தாள்களால் ஒட்டப்படும் எனவும், இதற்கு வேப்பம் பிசின் பயன்படுத்தப்பட்டதாகவும், வேப்பம் பிசின் ஊரவர்கள் எல்லாரும் கொண்டு தருவதாகவும், தனது அம்மா உடுப்புக்களைத் தைப்பதற்கு உதவி செய்வதாகவும் கூத்துப் பார்க்க வந்திருந்த 80 வயது மதிக்கத்தக்க த.அன்னநேசம் கூத்தனுபவத்தினூடாகப் பகிர்ந்து கொண்டார். ஆரையம்பதியில் தான் பார்த்த கூத்துக்கள், அவரது வீட்டில் இருக்கும் பழைய அழகுடனான கிரீடம் பற்றியும் சுற்றியிருந்தவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டது. (நேர்காணல்: த.அன்னநேசம்:2017) இவ்வாற்றுகை மக்களிடத்தில் உயிரோட்டமானதாகவும், பார்வையாளர்கள் மத்தியில் உண்மையான தேவைகளை நிறைவேற்றுவதாகவும் இருந்தது.

மத்தள அடி பற்றியும் அதன் அழகு பற்றியும் பேசிக் கொண்டனர். கூத்தின் அரிச்சந்திரன் கதையை தாம் முன்னர் பாடசாலையில் கற்றதுடன் பொருத்திப் பார்த்தனர். இளம் தலைமுறையினருக்கு இதனைப் பகிர்ந்து கொண்டனர். கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை மாணவர்கள் 2017இல் ''வீரகுமாரன்'' வடமோடிக் கூத்து ஆடி அரங்கேற்றியவர்கள். இவர்கள் இக்கூத்தில் இவ் இவ்வாய்வாளர் இதற்குக் கற்பிக்கும் பொறுப்பாசிரியராக இருந்து ''வேடன்'', ''முனிவர்'' ஆகிய கூத்துக்கு ஆடியிருந்தார். மாணவர்களும் இவ்வாய்வாளரும் இக்கூத்து அரங்கேற்ற விழாவைக் கற்றலுக்குரியதாக்கினோம். இதில் வரும் தாளக்கட்டு பாட்டு மெட்டுக்களின் அளவு, அதன் தன்மை, ஆட்டமுறை, பாட்டுமெட்டு போன்றவை பற்றியும், இன்றைய நவீன அறிவு, உலகமயமாக்கல் சூழலில் கூத்து எதிர்கொள்ளும் சவால், அதன் முக்கியத்துவம் அதன் சமகால முன்னெடுப்பின் போக்குத் தொடர்பானவை பற்றியும், சமுதாய ஊடாட்டத்தின் வலுவாக்கமும் பல தர்க்கிப்புக்கான தளம் பற்றியும் இவ்வாய்வாளரால் மாணவர்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது. கூத்தர்கள் தமது ஆட்டத்தினை உடலைப் பயன்படுத்திக் குரலை எழுப்பி அனைவரும் பாராட்டத்தக்கவாறும் பின்பற்றக் கூடியவாறும் (Exemplary) அம்பலப்படுத்தி (Expose) ஆற்றுகை செய்தனர்.

அரிச்சந்திரன் நாடகத்தின் கதையைப் பார்த்து அதனை தன்னுடைய வாழ்வுடன் உணர்த்திக் கொண்டனர். வேறுசிலரால் சந்திரமதி விற்கப்படல், லோகிதன் விறகு எடுத்து வருதல், துன்பப்படுதல் ஆகியன பற்றி தமக்கான மொழியில் உரையாடப்பட்டது. இரண்டு பேர் போவதற்கு மனம் இன்றி எழும்புவதும் இருப்பதுமாக இருந்து பார்த்து ஆற்றுகையில் மூழ்கினர். பாம்பு தீண்டி இறந்த லோகிதனைத் தாய் சந்திரமதி பார்ப்பதற்கு அனுமதி கிடைக்காது தவித்தல், அதற்கான வேலைகளைச் செய்தல், பின்னர் லோகிதன் உடலைக் கண்டு கட்டி அழுதல் ஆகிய சூழமைவைப் பார்த்த இவர்கள், இதனைப் பார்த்து விட்டே போவோம் எனத் தமக்குள் உரையாடினர்.

கூத்திற்கான காண்பியங்களில் ''கூத்துக் களரி'' அதன் அழகியல் ரசனையைப் பூர்த்தி செய்ததோடு ஏனைய அரங்கப் பொருட்கள் கூத்தரினால் கதைக்கருவின் சம்பவங்களையும் சூழமைவுகளையும் வலுப்படுத்தப் பயன்படுத்தப்பட்டது. வசிட்டமுனிவர் அரிச்சந்திரனிடம் ஆட்டினைக் காட்டி அதனை வெட்டிக் கறி சமைத்து வர வேண்டியபோது றெஜிபோமில் செய்த ஆட்டின் வடிவத்தைக் கூத்தர் தோளில் வைத்து சுமந்து சென்றதில் நடிப்பும் அதன் உணர்வும் வெளிப்பட்டது. அவ்வாறே நீலகண்ட முனிவரிடம் ''தனது மகன் பாம்பு தீண்டிக் கிடக்கிறான். நான் பார்க்கச் செல்ல வேண்டும் என அனுமதி கேட்ட போது'' பல வேலைகள் சொல்லிச் செய்ய வைக்கும் சூழமைவில் அரங்கப் பொருட்கள் (Theatre Props) பயன்படுத்தப்பட்டன. குப்பைகளைத் துப்பரவு

செய்யக் கூறியபோது விளக்குமாறால் கூட்டுவதும், தண்ணீர் ஊற்றக் கேட்ட போது குடத்தால் தூக்கிச் செல்வதும் நெல்லுக்குற்றிய போது உண்மையான உலக்கை, சுளகு பயன்படுத்தப்பட்டமையும் முக்கியமான போலச்செய்தலாகும். பொருத்தமான கைப்பொருளை (Hand props) சமகாலச் சமூகம் பயன்படுத்தும் பண்பாட்டுப் பொருட்களை உபயோகிக்கும் முறைமை இவ்வாற்றுகையில் வெளிப்பட்டது.

பாத்திரத்திற்கான கைப்பொருட்களைக் கூத்தர் பயன்படுத்துவது கூத்தின் கூத்தாட்ட வலுப்படுத்தலைத் தரமுயர்த்தும். இங்கு முனிவரின் கமண்டலம், வில், அம்பு, தண்டாயுதம், கைக்குட்டை, பறை, கம்பு எனும் பொருட்களும் பயன்படுத்தப்பட்டது.

கூத்தாட்டத்திற்கான வரவுத் தாளக்கட்டு பற்றிய உரையாடலும் நடைபெற்றது. கூத்தின் தாளக்கட்டு ஒன்றில் அரிச்சந்திரன் அமைச்சர், மகன், சந்திரமதி ஆகியோர் வேட்டைக்குப் போகும் வேட்டைத் தருவானது

“தந்தத் தகிந்த தகிந்ததாம்

திந்த திகிந்த திகிந்த தெய்”

எனும் தாளத்தை அடிக்க அதற்கு ஆடி “வேட்டைக்குப் போறானே…” எனும் பாட்டு பாடி ஆடப்பட்டது. இதனைப் பார்த்துக் கொண்டிருந்த கூத்தர் ஒருவர் என்னிடம் இதுபற்றி எடுத்து சுட்டிக்காட்டி விபரித்தார். இரண்டு பேரும் உரையாடினோம். “வேட்டைத் தருவிற்கு ஏற்ப தாளக்கட்டு அமையவில்லை என்றும் தேரில் ஏறி தேரோட்டத்துடன் சென்று அதற்கான மத்தள அடி அடிக்கும் போது வேட்டைக்குப் போகிறான் எனும் பாட்டு வந்தால் சரியாக ஆற்றுகை அமையும்” எனக் கூறினார். பொதுவாக கூத்தரின் “**ஆட்டத் தருவைக்**” கொண்டே அண்ணாவியாரால் தாளக்கட்டு வைக்கப்படுவது வழமை. இவ்வாறே தான் வயலுக்கு செல்லும் போது “ஆஞ்சநேயர் யுத்தம்” வடமோடிக் கூத்து களரியடிக்கும் போது சென்று பார்த்ததாகவும் அதில் ஒரு தாளம் வித்தியாசமாக அமைந்ததாகவும் அதனைப் கு.பொன்னம்பலம் அண்ணாவியாரிடம் கேட்டுத் தெளிவடைந்ததாகவும் கூறினார். (நேர்காணல்:சி.FNye;jpud;) கூத்தர்கள் தமக்கான திறனையும் தேடலையும் ஆராய்ச்சி நிலை நின்று பகுப்பாய்வு செய்வதற்கான கற்றல் களநிலை இதனூடாகப் புலப்பட்டது.

இவ்விழா கன்னங்குடா கூத்தர்கள், பண்டாரியாவெளி, அம்பிளாந்துறை, பருத்திச்சேனை, தன்னாமுனை, மகிழடித்தீவு ஆகிய ஊர்க் கூத்தர்கள் தமக்குள் ஊடாடி தமக்கிடையிலான உறவுப் பலப்படுத்தலை விரிவாக்க வழிகொடுத்தது. தமது ஊர்களில் நடக்கும், தாம் பழகும் கூத்துப் பற்றிய உரையாடலையும், ஆடிய கூத்தையும் பற்றிப் பகிர்ந்து கொண்டனர். இந்த அரங்கேற்ற விழாவைப் பார்த்தாலே தம்முடைய கூத்தில் ஆடிச் சாதித்தோருக்கு ஊக்கம் மேலேழுச்சி அடையும் எனக் கூறப்பட்டது. (நேர்காணல்: சி.சுந்தரலிங்கம்)

அண்ணாவிமாரின் சங்கமமாக கூத்து அரங்கேற்ற விழாவில் வழமைபோல் வெளிப்பட்டது. அவ்வாறு வந்திருந்த சீ.அலெச்சாண்டர் அண்ணாவியார் கூத்துக் களரிக்குள் மத்தளம் அடிக்கப் போகும் சந்தர்ப்பம் கிடைக்காத போதும் அந்த மத்தளப் பயன்பாடு பற்றி உரையாடியதோடு உதவிக்கு வைத்திருந்த மத்தளம் ஒரு பக்கம் சத்தம் எழும்பாததன் காரணமாக அதனை உணர்ந்து களரிக்கருகில் சென்று மத்தளத்தை எடுத்துச் சென்று இதற்கான குறையைக் கண்டு அதன் வாரை அவிழ்த்து இறுகக்கட்டி சத்தம் “கணீர்” என்று வரக்கூடியவாறு ஆக்கிக் கொடுத்தார். இது உதவி மத்தளக்காரருக்கு சந்தோசத்தைக் கொடுத்தது. கூத்தரங்க வெளி அண்ணாவிமார் கூடி செயற்படுவதோடு, தமக்கான ஆற்றல் வெளிப்பாட்டையும், திறன் விருத்தியையும் காட்டுவது ஆற்றுகையைச் சிறப்பாக முன்னெடுக்க தம்மாலான ஒத்துழைப்பைக் கொடுக்கும் போக்கு நவீன நாடகக்காரருக்கு கொடுக்கும் படிப்பினையாக அமைந்தது. தாம் உணர்ந்து ஆற்றுகை வெளிபாட்டிற்கு வலுச்சேர்த்து மத்தள அடியின் அழகியல் நுட்பத்தை வினைத்திறனுடையதாக்குவது சிறப்பம்சமாகும்.

**தர்க்கிப்பும் வியாக்கியானிப்பும்**

கூட்டாகச் செய்து செயற்படும் ஆற்றுகைக் கலைகளின் முன்னெடுப்புக்கள் அதற்கான பண்பாட்டு நடைமுறையுடன் செயற்படுவது. காலனியக் கல்விக் கட்டமைப்பும் அதன் கருத்தியல் சிந்தனையில் நிறைந்த உள்ளூர் புத்திஜீவிகளின் மனப்பாங்கும் நான்கு சுவருக்குள் கட்டப்பட்ட மூன்று பக்கம் அடைக்கப்பட்ட மேடைக்கான நாடக வடிவமாக மாற்றுவதற்கு மேனிலையில் இருந்து அறிவின் அதிகாரத்துடன் முடிவெடுப்பதனால் அக்கலையைப் கூட்டுணர்வுடன் பின்பற்றும் மக்களுக்கு உளச்சிக்கல்களையும், தாழ்வு மனப்பான்மையையும் ஏற்படுத்துகிறது. மக்களிடம் இருந்து எடுத்ததை அதே நடைமுறையுடன் செயற்படுத்தி அதே மக்களுக்குக் கொண்டு செல்லும்போது இந்நிலை வராது. “அடிப்புறத்தில் இருந்து அடிப்புறத்திற்கு” எனும் கோட்பாடு முன்னெடுப்பும் இதனையே விழித்து நிற்கின்றது. “சமூக பண்பாட்டுப் பின்புலத்தைப் புரியாமலும், அவற்றின் சமூகச் செயற்பாடுகளை அறிந்துகொள்ளாமலும் அவற்றின் அர்த்தம் தவறாகக் கட்டவிழ்க்கப்பட்டுச் சிதைக்கப்படுகின்றது”. (கலையரசி.அ.2013:74) காலனிய ஆய்வு முறையியலும், அச்சுப்பனுவலாக்கமும் கூட்டுத் தன்னிலைகளின் அகவெளியில் பெருங்குழப்பங்களை ஏற்படுத்துகின்றன.” (கலையரசி.அ.2013:75)

சமகால நவகாலனிய முன்னெடுப்பு உளச்சிக்கலை ஏற்படுத்தி அகத்தில் மாற்றத்தைச் செய்யும் அபத்தம் காலனியக் கல்விமுறையினூடாக வந்தது. அது தொழிநுட்ப ஊடகத்தினூடாக மேலேழுந்து கூட்டுப்பண்பாட்டு வெளியில் தாக்கம் செலுத்துகிறது. சமூக வாழ்வியல் கலையான கூத்தை குறுந்தகடுகளில் பதிவு செய்து விற்பனைக்குரிய பண்டமாகப் பார்க்க வைப்பதும், இன்னுமொருவர் அதனை வெறும் பண்டமாக நினைத்து உளத்தில் மாற்றத்தை செய்து கட்டமைப்பதும் சொந்தப் பண்பாட்டில் இருக்கும் மக்கள் கூட்டத்திற்கு தமது பண்பாட்டிலேயே அந்நியப்படுத்தலைச் செய்து சிதைக்கின்றமையும் ஏற்படுகிறது. கூட்டுச் செயற்பாட்டை பாரம்பரிய ஆற்கைகளிலும் சடங்குகளிலும் காணலாம். அரங்கேற்ற விழாவில் ஒன்று கூடி நேரடியாகப் பார்க்கும்போது உளத்தின் கூட்டு உணர்வின் பகிர்தல் எவ்வாறு அதிகரிக்கிறது என்பதை உணரத்துகிறது. இது குறுந்தகடுகளில் பதிவு செய்து விற்க்கப்படும்போதும் படச்சட்ட மேடைக்குள் புகுத்தும்போதும் சிதைகிறது.

‘‘அரிச்சந்தின் நாடகம்’’ கூத்து அரங்கேற்ற விழா ஆற்றுகைக் கலைகள் நிலவுடமைச் சமூகத்தின் சாதி, பால்நிலை அசமத்துவத்தை விரிவுபடுத்தும் பாரத, இராமாயணக் கதைப் பாத்திரங்களினூடாக பரப்புகிறது எனும் விமர்சனம் அவதானத்திற்குரியது. இதனால் தொன்மங்களையும் இவ்விலக்கியக் கதைகளையும் எவ்வாறு பரப்புகின்றது என்பதன் புரிதலும் தர்க்கித்தலும் அவதானத்திற்குரியது. அரிச்சந்திரன் நாடகம் வடமோடிக் கூத்தில் முனிவர் வேண்ட பிள்ளையை வெட்டிக் கறி சமைத்துக் கொடுப்பது உயிர்க் கொலையாகவும், சிறுவர் வன்முறையைச் செய்வதையும் காட்டுவதோடு, மனைவியை விற்றல் பெண் அடக்குமுறையைப் பரப்புவதாகவும் உள்ளது. உண்மையைப் பேசுதல் எனும் நற்பண்பின் படிப்பினையை ஒரு கதையினூடாகக் காட்டும் கருத்தியலை அச்சாணியாகக் கொண்டாலும் சமகாலத்தில் அதற்காகக் கொடுக்கப்பட்ட எடுத்துக்காட்டுக்கள் வன்முறையை அதிகரிப்பதாகவும், சாதியத்தை மேனிலைப்படுத்துவதாகவும், பால் நிலை அசமத்துவத்தை விரிவாக்குவதாகவும் உள்ளது.

கூத்தரங்க ஆற்றுகையின் பண்பாட்டு வெளியில், திறந்த வெளியின் கூட்டுணர்வு, உளநிலைப் பகிர்வு, சமூக வாழ்வியல் வெளிப்பாடு, மக்கள் கருத்து வெளிபாடு நிறைந்து காணப்படும் பொறியுண்டு. தொடர் செயற்பாட்டினூடாகச் செய்து செயற்பட்டு சமூகத்தை உருவாக்குதலும் ஊடாடுதலும் நிறைந்ததன் வெளிப்பாடே அரங்கேற்ற விழா. கூத்தின் தொடர் செயற்பாடு, அதன் விழா மையம், மக்களின் உள வெளிப்பாடு ஆகியவற்றுடன் தமது பண்பாட்டுச் சூழலில் சிதைக்கும் புதிய வன்முறையற்ற தன்மையுடனும், சுய சிந்தனையுடனும் கூத்தை ஆக்குவதும் அரங்கேற்ற விழா செய்வதும் அவசியம் என்பது புலனாகிறது. கூத்தரங்கின் ஆற்றுகை முறைமைகள் மக்களின் வாழ்வியல் தன்மையைத் தொடர் செயற்பாட்டுடன் கூட்டாக இணைக்க வல்லது. சி.ஜெயசங்கரின் ‘‘கூத்து மீளுருவாக்கம்’’ பாரத, இராமாயணக் கதைக் கட்டமைப்பின் அரசியலைக் கட்டவிழ்த்து மீளுருவாக்கி ஆற்றுகை செய்கின்றமையும் கவனத்திற்குரியது.

கூத்தரங்கேற்ற விழாக்கள் காலனியக் கருத்தாக்க சிந்தனைகளை நீக்கும் கைங்கரியத்தை இயல்பாகச் செய்கின்றன. கூத்து வாழ்வியல் அமைப்புடனும் உள அமைப்புடனும் பின்னிப் பிணைந்தவை. ஒட்டு மொத்த சமூக நிகழ்வாக அமைபவை. சமூகமயப்பட்ட கூத்து விழாவைச் சமூக பண்பாட்டு வெளியில் அடைக்கப்பட்ட நவீன நாடகக் கட்டமைப்பின் பார்வையில் வடிவமைப்பது அந்நியப்படுத்தலை ஏற்படுத்தும். மக்களின் உணர்வு, புரிதல், ஈடுபாடு ஆகியவற்றுடன் உள வெளிப்பாட்டைப் பகிர்ந்து கொள்வது பண்பாட்டு வெளியில் முக்கிய பிரயோகமாக அமையும். இது கூட்டுச் செயற்பாட்டின் பண்பாட்டு அடையாளமாகவும் பின்காலனிய அரங்க ஆற்றுகை முன்னெடுப்பாகவும் அமையும்.

**முடிவுரை (Conclusion)**

கூத்துப் பண்பாடு ஊரின் பண்பாட்டுப் பாரம்பரியங்களையும் வரலாற்று ஓட்டத்தையும், மீள மீள புதிப்பிப்பதாகவும், அதனூடாகப் புதிய வரலாற்றைக் கட்டியெழுப்புவதாகவும் இளம் சமூகத்திற்கு கையளிப்பதாகவும் அமையும். இவ்வாறாக இதனை, மக்கள் கொண்டாடி மகிழ்ந்ததினூடாக வலுவாக இவ்விழா காட்டியது. செய்து செயற்பட்டு கூடி வாழ்தலினூடாக உருவான இக்கூத்து விழாவானது பண்பாட்டு வெளியில் கூத்தரங்கின் வினைத்திறன் மிக்க கூட்டுச் செயற்பாடாக அமையும். சொந்தப் பண்பாட்டுடன் அந்நியப்படுத்தலை ஏற்படுத்தி அதனைப் விற்பனைப் பண்டமாக மாற்றும் உலகமயமாக்கல் வெளியில் இவ்வாறான விழாக்கள் சமூகத்தைக் கூட்டி இணைத்து ஆற்றுகையினூடாகக் கொண்டாடும் பண்பாட்டு வெளியை உருவாக்கும் என்பதை அறியலாம்.

**உசாத்துணை நூல்கள்**

1. பாவ்லோ பிரையிரே, (2010). ‘‘ஒடுக்கப்பட்டவர்களின் விடுதலைக்கான கல்விமுறை,’’ தமிழில் இரா.நடராஜன், இந்திய மாணவர் சங்கம், இரண்டாம் பதிப்பு, சென்னை.

2. முத்துமோகன்.ந., (2012). ‘‘பின்னைக் காலனிய வாதங்களில் நவீனம், காலனியம், முதலாளியம்’’, தெ.மதுசூதனன், (பதி) சமூகவெளி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

3. கப்ரால்.அமில்கர்., (2012). விடுதலைப் போராட்டத்தில் பண்பாட்டின் பாத்திரம், பாலச்சந்திரன்.எஸ் (மொ.பெ), பாரதி புத்தக நிலையம், சென்னை.

4. சுந்தரம்பிள்ளை.செ, (2000). வட இலங்கை நாட்டார் அரங்கு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு-சென்னை.

5. மௌனகுரு.சி, (1998). மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள், விபுலம் வெளியீடு, மட்டக்களப்பு.

6. முத்தையா,இ., (1986). நாட்டுப்புற மருத்துவ மந்திரச் சடங்குகள், வெண்ணியா பதிப்பகம், மதுரை.

7. முத்தையா.இ., (2010). (தொகு) தமிழர் பண்பாட்டு வெளியில் நிகழ்த்துகலைகளும் உலக நோக்கும், காவ்யா, சென்னை.

8. தியாங்கோ.நுகிகூ வா., (2004). அடையாள மீட்பு - காலனிய ஓர்மை அகற்றல், அ.மங்கை, (மொ.பெ) வல்லினம், அரசுகுடியிருப்பு, புதுவை.

9. இரத்தினக்குமார்.ந., (2017). பின்காலனியம்: சமூகம் - இலக்கியம் - அரசியல், பாவை பாப்ளிகேஷன்ஸ், இராயப்பேட்டை, சென்னை.

10. ஜெயசங்கர்.சி, (2011). கூத்து மீளுருவாக்கம், கருத்துப்பட்டறை, சென்னை.

English Books

1. Frasca. A. Richard., Therukkuttu – Ritual Theatre of Tamil – Nadu Jhon Bell, Puppets Masks and performing object Vol: 43, No.3 University of New York, 1996.

2. Erika Fischer – Lichte Translated by Saskya It is Jain 2008, The Tranformative Power of Performance – A new Asthetics, Routledge, Abingdon, Oxon.

**ஆய்வு நூல்**

“ஈழத்துக் கூத்தியல் ஆய்வில் காரை செ.சுந்தரம்பிள்ளையின் வட இலங்கை நாட்டார் அரங்கும் பேராசிரியர் சி.மௌனகுருவின் மட்டக்களப்பு மரபுவழி நாடகங்களும் - ஓர் ஒப்பீட்டாய்வு” எனும் ஆய்வு நூல் சு.சந்திரகுமாரால் 2014 ஆம் ஆண்டு கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறையில் முதுதத்துவமாணிப் பட்டத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டது.

**நேர்காணல்**

1. ப.கதிர்காமநாதன், வயது 48, அண்ணாவி, கமம், கொக்கட்டிச்சோலை, 2017.
2. வே.வல்லிபுரம், வயது 78, அண்ணாவி, மகிழடித்தீவு, 2017.
3. க.இராசலிங்கம், வயது 50, வியாபாரம், கொக்கட்டிச்சோலை, 2017.
4. பி.நீதிதேவன், வயது 39, அபிவிருத்தி உத்தியோகஸ்த்தர், கொக்கட்டிச்சோலை, 2017.
5. ப.சுரேஸ்குமார், வயது 32, அரச உத்தியோகஸ்த்தர், கொக்கட்டிச்சோலை, 2017.
6. திருமதி த.அன்னநேசம், வயது 80, ஓய்வுபெற்ற ஆசிரியர், ஆரையம்பதி, 2017.
7. சி.சேதுரை, வயது 49, கமம், கூத்துக் கலைஞர், முதலைக்குடா, 2017.
8. சி.சுந்தரலிங்கம், வயது 54, கமம், கூத்துக் கலைஞர், படையாண்டவெளி, 2017.
9. சி.குலேந்திரன், வயது 40, கூலித் தொழில், கூத்துக் கலைஞர், பனிச்சையடிமுன்மாரி, 2017